**தலைப்பு 288 – நில அளவையாளர் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நில அளவையாளர் திணைக்களத்தின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நில அளவையாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நில அளவையாளர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கும் இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடியவாறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களமானது வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குக் கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் அடங்லான நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்போது, நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் அவசியம் இல்லாமையால் மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) நில அளவையாளர் திணைக்களம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் அவசியம் இல்லாமையால் அந்த ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காமை**

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/218 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க வேண்டுமாயினும், அத் தேவைகளுக்கு அப்பாற்பட்டவாறான சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) நிதிசாரா சொத்துக்கள் இனங்காணப்பட்டு கிரயத்தில் அல்லது மதிப்பிடப்பட்ட பெறுமதியில் கணிப்பிலிடப்பட வேண்டுமாயினும், ரூபா 13 மில்லியன் செலவில் பொலனறுவை மாவட்ட நில அளவை அலுவலகமும் ரூபா 15.15 மில்லியன் செலவில் தலைமை அலுவலக விடுதி நிர்மாண நடவடிக்கைகளும் முறையே 2017 ஆம் 2018 ஆம் ஆண்டுகளில் முடிவடைந்திருந்தபோதும், இச்சொத்துக்களது கிரயம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | சுற்றறிக்கையின் 8.5 ஆம் பந்தியின் பிரகாரம் நிர்மாணப் பணி முடிவடைந்த கட்டிடங்களது கிரயம் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | பொலனறுவை மாவட்ட நில அளவை அலுவலகக் கட்டிடம் கட்டிடத் திணைக்களத்தின் பூரண மேற்பார்வையின் கீழ் நடைபெற்றது. அதற்குரிய ரூபா 13 மில்லியன் கட்டிடத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டது. 150 ஆம் இலக்க விடுதிக் கட்டிட நிர்மாணப் பணிக்கான முழுக் கொடுப்பனவும் 2014 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) 2017 ஆம் ஆண்டு காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சினால் நில அளவையாளர் திணைக்களத்திற்கு காணி வங்கிச் செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 37.83 கிரயமுடைய மடிக் கணனிகள், டிஜிட்டல் கேபள் பொருத்திகள் மற்றும் நில அளவை ஆய்வு இயந்திரங்கள் ஆகிய சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை. | சுற்றறிக்கையின் 8.5 ஆம் பந்தியின் பிரகாரம் பிற நிறுவனங்களது நிதியின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் முறையாகக் கணக்கிலிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் | இச் சொத்துக்கள் எமது திணைக்களக் கையிருப்பு அறிக்கைகளில் முறையாக உள்ளடக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் இச்சொத்துக்களைச் சுவீகரிப்பதற்கு எதிர்கால நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | | காட்டப்பட வேண்டும். | மேற்கொள்ளப்படும். |
| (இ) | நிதிச் செயலாற்றல் கூற்றில் ஆண்டின் இறுதியில் உள்ளவாறிருந்த ரூபா 255,080,143 மீதியை சீராக்கல் செய்வதற்கு கட்டு நிதிச் சீராக்கல் கணக்கு ஒன்று தயாரிக்கப்படாது அம்மீதி நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பாகக் காட்டப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் சுட்டிக்காட்டப்பட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான வழிகாட்டலுக்கு அமைய திறைசேரியில் ஒப்படைக்கப்பட வேண்டிய மீதியை இனங்காண்பதற்கு கட்டு நிதிச் சீராக்கல் கணக்கொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 255,080,143 கட்டு நிதி மீதி நிதிக்கூற்றில் நடைமுறைப்பொறுப்பின் கீழ் குறித்துக் கொள்ளப்பட்டது. கணக்கை இணக்கம் செய்யும்போது நிதிச் சொத்துக்களின் கீழும் அத்தொகை குறித்துக் கொள்ளப்பட்டது. இந்நிதிக் கூற்றுப் படிவத்திற்கமைய இவ்வாண்டில் முதல் முதலாக இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டமையால் எதிர்காலத்தில் இவ்வாறான தவறு ஏற்படா வண்ணம் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஈ) | மீளாய்வாண்டில் 2 வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்களால் ஏற்பட்ட ரூபா 66,819 இழப்பு நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைப் பிரகாரம் திணைக்களச் சொத்து இழப்புகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | ஒரு வாகனத்தின் ஆரம்ப அறிக்கையைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதத்தால் வெளிப்படுத்த முடியவில்லை. 250 - 0424 இலக்க வாகன இழப்பின் ஒரு பகுதி அறவிடப்பட்டவாறுள்ளது. |
| (உ) | திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் ரூபா 14.26 மில்லியன் உடன்படிக்கைத் தொகையில் இளைப்பாறும் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளபோதும், அக்கிரயம் கணக்கிலிடப்படவில்லை. | வேலை முடிவடைந்த கட்டிடங்களது கிரயம் கணக்கிலிடப்பட வேண்டும். | ஒப்பந்தக்காரர் இறுதி விலைப்பட்டியலைச் சமர்ப்பித்திராமையால் கட்டிடத்தின் மொத்த வேலைப் பெறுமதியையும் பெற முடியாது அது 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை என்பதைக் குறிப்பிடுகின்றோம். |
| (ஊ) | திணைக்களத்திற்குச் சொந்தமான 1.3139 ஹெக்டேயார் காணி, பதுளை சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் உத்தியோகபூர்வ | திணைக்களத்தின் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டுக் | பிரதேசவாரியாக ஒவ்வொரு அலுவலகத்தாலும் வழங்கப்பட்ட |

| | | |
|---|---|---|
| மனை, அனுராதபுரத்தில் உள்ள முற்புனைவு முகாம், தென் மாகாணத்தில் மேலும் 02 கட்டிடங்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டுக் கணக்கிலிடப்படாதிருந்தன. | கணக்கிலிடப்பட வேண்டும். | காணிகளுக்கும் கட்டிடங்களுக்குமுரிய தரவுகளை விலை மதிப்புத் திணைக்களத்திற்கு அனுப்பி அத்திணைக்களத்தில் மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது. ஏனைய காணிகளையும் கட்டிடங்களையும் எதிர்காலத்தில் மதிப்பீடு செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஏசீஏ - 3 மாதிரிப் படிவத்தின் பிரகாரம் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டு நிதிக் கணக்கின் ரூபா 34,898,068 மீதி நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்படவில்லை. | ஆண்டின் இறுதியில் கட்டு நிதி மீதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | 2016 ஆம் ஆண்டில் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தை நாளதுவரையாக்குவதற்கு முன்னர் இவ்வாறான மாற்றங்கள் கட்டு நிதிக் கணக்கில் காணப்படவில்லை. 2016 ஆம் ஆண்டின் பின்னர் அறிமுகமாகிய புதிய சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் (New Version) கீழ் கணக்கிலிடுவதற்கு அறிமுகஞ் செய்யப்பட்ட புதிய விதிமுறைகளின் பிரகாரம் ஏற்பட்ட வித்தியாசமாகும். அதற்கிணங்க சுட்டிக்காட்டப்பட்டிருந்த வேறுபாடுகளால் கணக்குகளில் எதுவித மாற்றமும் ஏற்படாது. |
| (ஆ) | அரசாங்க மதிப்பீட்டாளர்களது அறிக்கைப் பிரகாரம் 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு காணி, கட்டிடங்கள் மற்றும் வாகனங்களது பெறுமதி முறையே ரூபா 5,682,713,500, ரூபா 1,020,873,500 மற்றும் ரூபா 561,905,000 என்பனவாக இருந்தபோதும், அப்பெறுமதியானது நிதிக்கூற்றுக்களில் ரூபா | குறித்த சொத்துக்களது மதிப்பிடப்பட்ட பெறுமதி நிதிக்கூற்றுக்களில் பிழையின்றி காட்டப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் அநேக நிதிசார்பற்ற சொத்துக்கள் இரு முறை கணக்கிலிடப்பட்டுள்ளமையால் திறைசேரியின் அறிவுறுத்தலின் படி அப்பெறுமதிகளைப் பூச்சியமாக்கி மீண்டும் தகவல்கள் உள்ளடக்கப்பட்டன. அத்தகவல்களை உள்ளடக்கும் போது ஏற்பட்ட வழுக்களால் |

| | | | |
|---|---|---|---|
| | 5,684,129,500, ரூபா 1,008,987,793 மற்றும் ரூபா 601,745,000 எனக் காட்டப்பட்டிருந்தது. | | இவ்வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. வாகனப் பெறுமதியைக் கணக்கிலிடுகையில் காப்புறுதி மதிப்பீட்டுப் பெறுமதி தவறுதலாக நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| (இ) | காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சிற்குச் சொந்தமான டபள் கெப் வாகனமொன்று ரூபா 1.3 மில்லியனில் மதிப்பீடு செய்யப்பட்டு திணைக்களத்தின் மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | வேறு நிறுவனங்களது சொத்துக்களைத் திணைக்களத்தின் சொத்தாக நிதிக்கூற்றுக்களில் காட்ட இயலாது. | காணி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினால் இவ்வாகனம் உள்ளடங்கலாக மேலும் 13 வாகனங்களும் எமது திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. சொத்துரிமையைப் பெறுவதற்குத் தேவையான சகல ஆவணங்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளபோதும் அவற்றின் பதிவுச் சான்றிதழ் தொலைந்து போனமையால் பதிவுச் சான்றிதழ் பெறப்பட்டதன் பின்னர் சொத்துரிமையைப் பெறக்கூடியதாகவிருக்கும். |
| (ஈ) | மீளாய்வாண்டின்போது ரூபா 75.29 மில்லியன் நில அளவையாளர் திணைக்களம் அடங்கலாக 07 கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கெனக் கட்டிடத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இக்கட்டிட நிர்மாண வேலைகள் நடைபெற்றவாறுள்ளபோதும் அத்தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை. | நடைபெறும் வேலை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்ட புதிய கட்டிட நிர்மாண வேலைகளுக்கு எமது திணைக்களத்திற்கு ரூபா 162 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. எனினும், வழங்கிய நிதிக்கு சமமான கட்டு நிதி திறைசேரியிடமிருந்து பெறப்பட முடியுமாகையால் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு இச்செலவினத் தலைப்பில் சேமிப்பு ஏற்பட்டிருந்தது. கட்டிடத் திணைக்களத்தால் நிதி ஏற்பாட்டிற்கான கட்டு நிதியைப் பெறுவதற்கான அறிக்கைகள் 2019 ஆம் ஆண்டின்போது வழங்கப்பட்டதன் காரணமாக 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு இறுதி முடிவுறாத வேலை மீதியாக இத்தரவு உள்ளடக்கப்படவில்லை. |

### 1.6.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான கணக்கிணக்கக் கூற்று

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஒன்று முதல் 35 ஆண்டு காலப்பகுதியின்போது ஓய்வு பெற்ற, மரணமடைந்த, சேவை விலகிய, வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியதாக உள்ள ரூபா 6.59 மில்லியன் கடன் மீதியை அறவிடுவதற்குத் திணைக்களம் இதுவரை தவறியிருந்தது. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஓய்வுபெற்ற, மரணமடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து ஏற்கனவே ரூபா 601,250.64 அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.<br>ரூபா 124,433 கடன் மீதியில் ரூபா 68,457 கடன் மீதியை ஒய்வூதியப் பணிக்கொடையில் அறவிடுவதற்கான தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. |

### 1.6.4 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 6,693 மில்லியனாகவுள்ள காணிகளதும் கட்டிடங்களதும் உரித்தை உறுதி செய்யும் உரித்துறுதிகளும் அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத் திட்டங்களும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | சொத்துக்களது சட்டபூர்வ உரித்தை உறுதி செய்யும் ஆவணங்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இந்த ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப்பிரமாணம் 880 | திணைக்களத்தில் காசுப் பொறுப்பை | பிரமாணங்களுக் கமைய பிணை | தற்போது பிற சேவைகளைச் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வகிக்கும் 37 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப் பணம் பெறப்படவில்லை. | வைப்புப் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சேர்ந்த உத்தியோகத்தர்களே காசுப் பொறுப்பை வகிப்பதால் எதிர்காலத்தில் அவர்களிடமிருந்து பிணைப்பணம் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 891(1) | பிணை வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர்களதும் ஊழியர்களதும் தகவல்களை உள்ளடக்கிய பிணை வைப்புப் பதிவேடு தயாரிக்கப்படவில்லை. | பிணை வைப்புப் பதிவேடு பேணப்பட வேண்டும். | பிணை வைப்புப் பதிவேட்டை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 1646 | திணைக்களத்தின் 59 வாகனங்களது நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை | நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டினது சகல மாகாண அலுவலக நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | 2008 டிசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்படக் கூடிய அதி கூடிய இடர்க் கடன் வரம்பு ரூபா 250,000 ஆகுமாயினும், 3 உத்தியோகத்தர்களுக்கு இடர்க் கடனாக ரூபா 1,034,945 கூட்டுத் தொகை இடர்க்கடனாக வழங்கப்பட்டிருந்தது. | வரம்பிற்கு அதிகமான கட்ன வழங்கப்படல் ஆகாது. | கடன் மீதியை அறவிடுவதற்கான கடிதம் குறித்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வருமானத்தை முன் கூட்டியே மதிப்பிடுகையில் 2002 யூலை 17 ஆந் திகதிய அரச நிதிக் கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைச் சுற்றறிக்கை இலக்கம் 01/2002 இன் 5 ஆம் பந்தியின் பிரகாரம் கடந்த காலப் போக்கு மற்றும் அவற்றின் விசேட குணங்கள் தொடர்பாகக் கவனம் மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டில் ரூபா 350 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டபோதும், உள்ளவாறு ரூபா 433 மில்லியனே பெறப்பட்டதால் 24 சதவீத இலாப வருமான மதிப்பீடே தயாரிக்கப்பட்டிருந்தது. | இயன்றவரை பிழையின்றி வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | நியதிச் சட்ட அளவைகளுக்குத் திணைக்களம் பணம் அறவிடுவதில்லை. கூட்டுத்தாபனம், சபை போன்ற அரச நிறுவனங்களது கோரிக்கைகளின் பேரில் அளவை மேற்கொள்ளப்படுகையில் பணம் அறவிடப்படுகின்றது. இதன் காரணமாக, ஒவ்வொரு ஆண்டினதும் அரசாங்க செயற்திட்டங்களது தன்மைக்கேற்ப வருமானம் மாற்றம் அடைவதால் முன் கூட்டியே நிச்சயமாகக் கணிப்பிட முடியாதுள்ளது. |
| (ஆ) திணைக்களத்தால் வழங்கப்படும் காணிகள் தொடர்பான தகவல்கள் மக்களுக்கு அறிவிக்கப்படாமை மற்றும் அநேக வரைபடங்கள் நாளதுவரையாக்கப்படாமை, விற்பனை மேம்பாட்டிற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை போன்ற காரணங்களால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் வரைபட விற்பனை மூலமான வருமானம் ரூபா 2.75 மில்லியன் குறைவடைந்தும் விசேட வரைபட விற்பனை வருமானம் ரூபா 1.27 மில்லியன் குறைவடைந்தும் 1.10,000 எண் தரவுகளது விற்பனை ரூபா 8.51 மில்லியன் குறைந்துமிருந்தது. எவ்வாறாயினும், வருமானத்தை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | வருமான வழியை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | திணைக்களத்தின் வரைபட விற்பனை மேம்பாட்டிற்கு ஊடகங்கள் மூலம் நிகழச்சித்திட்டங்களை வழங்கி அல்லது புதினப் பத்திரிகை, தொலைக்காட்சி அறிவித்தல்களை வழங்குவதற்கு வேறான நிதியேற்பாடு எதுவுமில்லை.எனினும், எமது திணைக்கள வெப் இணையத்தளத்தில் சகல வரைபடங்களும் புதிய ஆக்கங்களும் வெளியிடப்பட்டு அவற்றினது விலைகள் குறிக்கப்பட்டுமுள்ளன. |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 12 மூலதனச் செலவினங்களில் 07 முதல் 73 சதவீதமான ரூபா 144.87 மில்லியனும் 15 மீண்டுவரும் செலவின விடயங்களில் 8 முதல் 70 சதவீதமான ரூபா 35.57 மில்லியனுமாக ரூபா 180.44 மொத்தமாக நிதியேற்பாட்டுச் சேமிப்பு நிலவியது. | நிதிப்பிரமாணம் 50 க்கமைய பிழையற்ற மதிப்பிடு தயாரிக்கப்பட வேண்டும். | மூலதனச் செலவின விடயங்கள் 12 மற்றும் மீண்டுவரும் செலவின விடயங்கள் 15 என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான சேமிப்பு ஏற்பட்டுள்ளது. |

## 2.3 பொறுப்புகளுக்கும் கடப்பாடுகளுக்கும் உட்படுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினது மீளாய்வாண்டிற்கான ரூபா 4,430,025 பொறுப்பானது நிதிசார் கூற்றுக்களில் காட்டப்படவில்லை. | பொறுப்புகளது பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | நிச்சயமாக இனங்காணப்பட்ட பொறுப்புகள் மாத்திரமே குறித்துக் கொள்ளப்பட்டுள்ளன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொலைநோக்கும் செயற்பாடுகளும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| காணிகளது தகவல்களை வழங்குவதில் எப்போதும் முன்னணியில் நிற்பது திணைக்களத்தின் தொலைநோக்கு ஆகும். தரம் மிக்க காணித் தகவல்களை வழங்குதல் பிரதான செயற்பணியாகும். அதற்கமைய, கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் நாளதுவரையாக்கப்பட்டு வரைபடத்தை வெளியிடுதல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதும், இலங்கை தேசிய வரைபடக் கோவை 2008 ஆம் ஆண்டின் பின்னர் நாளதுவரையாக்கப்பட்டு | திணைக்களத்தின் தொலைநோக்கும் செயற்பணியும் வெளியே தோற்றும் வண்ணம் செயற்பட வேண்டும். | தேசிய வரைபடக் கோவைக்கான கோரிக்கை அதிகளவில் இல்லாததால் அவற்றை நாளதுவரையாக்குவதற்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை. 2016, 2017 ஆம் ஆண்டுகளின் போது 1:50,000 வரைபடங்களது இரண்டாவது வெளியீடு பிரசுரிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டபோதும், கள விசாரணை நடவடிக்கைகளில் |

| | | |
|---|---|---|
| வெளியிடப்படவில்லை. | | ஏற்பட்ட வசதியின்மை காரணமாக அது ஓரளவு தடைப்பட்டது. எவ்வாறாயினும், 2018 இறுதியில் இந்த வரைபடங்கள் 98 சதவீதமளவில் பூர்த்தி செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. |

**3.2 திட்டமில்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் 13 பிரதான பணிகளின் 08 மாத்திரமே செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கியிருந்தன. அந்த ஒவ்வொரு செயற்பாட்டு உறுப்பையும் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகை மற்றும் வருமானச் சேகரிப்பு தொடர்பான இலக்குகளும் அதற்குரிய காலப்பகுதியும் உள்ளடக்கப்படவில்லை. | திணைக்களத்தின் பிரதான பணிகள் வெளியே தோன்றும் விதத்தில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். செலவினம் மற்றும் வருமான சேகரிப்பு சம்பந்தமான இலக்குகளும் காலப்பகுதியும் உள்ளடக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

**3.3 பூர்த்திசெய்யப்படுவதற்கு எதிர்பார்த்த மட்டம் பெறப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1:10,000 பரிமாணத்திலான 1834 வரைபடங்களை நிர்மாணித்திருக்க வேண்டுமாயினும், 700 வரைபடங்கள் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தன. | எதிர்பார்த்த இலக்கை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | பதில் வழங்கப்படவில்லை. |

**3.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2002 செப்டம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் | சுற்றறிக்கைப் பிரகாரம் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் | பதில் வழங்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| முன்வைக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கையை 2019 மே 31 ஆந் திகதியளவிலும் திணைக்களம் பாராளுமன்றத்தில் முன்வைத்திருக்கவில்லை | முன்வைக்கப்பட வேண்டும். | |

**3.5 பொருட் கொள்வனவு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினது 08 மாதங்களுக்கு பாதுகாப்புச் சேவையை பெறுவதற்கு குறைந்த விலையைச் சமர்ப்பித்து சாதகமான பதில் வழங்கிய கேள்வியாளருக்கு நியமங்களுக்கேற்ப வழங்கப்பட வேண்டிய புள்ளிகளுக்கும் குறைவாக வழங்கப்பட்டமையால் அதிக விலையைச் சமர்ப்பித்த கேள்வியாளர் தெரிவு செய்யப்பட்டு ரூபா 1.17 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டுக் குறிப்பிட்ட சேவையை பெற வேண்டியேற்பட்டது. | பொருட் கொள்வனவின் போது அரசாங்கத்திற்கு மிகவும் சாதகமாக அமையுமாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கூறு விலைகளுக்கேற்ப 08 ஆம் இடத்தில் உள்ள குறைந்த கூறு விலையாளர் பயிற்சி உத்தியோகத்தர்களைப் பயன்படுத்தி பயிற்சி வழங்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதால் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. |

**3.6 சொத்து முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) பயன்படுத்தப்படாதிருக்கும் சொத்துக்கள்** | | |
| தியத்தலாவையில் உள்ள அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவகத்தின் 21 உத்தியோகபூர்வ மனைகள், ஊவா மாகாண சேர்வயர் ஜெனரல் அலுவலக தொழில்நுட்ப உத்தியோகத்தரது உத்தியோகபூர்வ மனை மற்றும் 13 மோட்டார் வாகனங்கள் என்பன 02 முதல் 08 ஆண்டுகளாக பயன்படுத்தப்படாது இருந்தபோதும், அச்சொத்துக்களைப் பழுதுபார்க்கவோ பயன்படுத்துவதற்கோ அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பயன்படுத்தப் படாதிருக்கும் சொத்துக்கள் தொடர்பாக 771 ஆம் நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆறு வாகனங்கள் பயன்படுத்தப்பட முடியாமை தொடர்பான நடவடிக்கைகள் முடிவு செய்யப்பட்டுள்ளதுடன், 06 வாகனங்களுக்கு மீண்டும் கேள்விகளைக் கோருவதென பொருட் கொள்வனவுக் குழு தீர்மானித்துள்ளது. ஒரு வாகனத்தின் செஸி இலக்கம் உடைந்துள்ளமையால் பயன்படுத்த முடியாமை தொடர்பாகப் பிரச்சினை எழுந்துள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | **ஏனைய நிறுவனங்களது சொத்துக்களை முறையற்றவாறு பயன்படுத்தல்** | | |
| | காணி அமைச்சினது பிம்சவிய நிதியேற்பாட்டின் மூலம் ரூபா 312 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட அளவை உபகரணங்கள் அடங்கலாக பல்வேறு மூலதனச் சொத்துக்கள் மற்றும் ரூபா 82 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் என்பன சுவீகரிக்கப்படாது பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. | ஏனைய நிறுவனங்களது நிதியேற்பாட்டின் மூலம் பெறப்பட்ட சொத்துக்களைச் சுவீகரிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | இச் சொத்துக்களை எதிர்காலத்தில் சுவீகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டவாறுள்ளது. |

## 3.7 நட்டங்களும் இழப்புகளும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வாகனங்களுக்கும் சொத்துக்களுக்கும் 01 முதல் 29 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட 47 சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட ரூபா 6.5 மில்லியன் இழப்பை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இழப்புகள், நட்டங்கள், தொடர்பாக 110 ஆம் நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ்விபத்துக்கள் 47 சந்தர்ப்பங்களில் 32 வாகனங்களுக்கு ஏற்பட்டனவாகும். இழப்பை அறவிடுவதற்கான எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டவாறுள்ளது. |

## 3.8 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 14,845 அளவைக் கட்டணங்களுடன் 2009 முதல் 2018 இறுதி வரை திணைக்களம் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த மொத்த அளவைக் கட்டளைகளது எண்ணிக்கை 33,443 ஆகும். எவ்வாறாயினும், 22,039 அளவைக் கட்டளைகள் அதாவது 66 சதவீதமானவற்றை மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்குத் திணைக்களம் தவறியிருந்தது. | நீதிமன்ற அளவைக் கட்டளைகள் அடங்கலாக நிலுவையாக உள்ள அளவைக் கட்டளைகளைப் பூர்த்தி செய்வதற்கு விரைந்து நடவடிக்கை எடுககப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (ஆ) திணைக்களத்தின் நில | அளவைத் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | அளவையாளர் ஒருவர் மாதாந்தம் குறைந்தளவு 20 நிலத் துண்டுகளை (Norms) அளவையிட வேண்டுமெனும் 36 ஆண்டுகளுக்கு முன்னரான ஏற்பாடு அளவைத் தொழில்நுட்பமும் உபகரணத் தொழில்நுட்ப முன்னேற்றமும் உள்ள தற்போதைய நிலைமைக்கேற்றவாறு மீளாய்வு செய்யப்படவில்லை. | தொழில்நுட்பமும் உபகரணத் தொழில்நுட்ப முன்னேற்றமும் உள்ள தற்போதைய நிலைமைக்கேற்றவாறு மாதாந்தம் அளவிடக்கூடிய நிலத் துண்டுகளது எண்ணிக்கை மீளாய்வு செய்யப்பட வேண்டும். | |
| (இ) | மீளாய்வாண்டின் போது ரூபா 9,622 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட 327 வாகனங்களும் இயந்திர உபகரணக் கையிருப்பும் அரசாங்க மதிப்பீட்டாளரால் மதிப்பிடப்பட வேண்டுமாயினும், திணைக்கள உத்தியோகத்தர்களே குறித்த மதிப்பீட்டை மேற்கொண்டிருந்தனர். | சொத்துக்களை மதிப்பீடு செய்வதானது அரசாங்க தொழில்சார் விலை மதிப்பீட்டாளர்களினது சேவையின் மூலம் பெறப்பட வேண்டிய நடவடிக்கை ஆகும். | - மேற்படி - |
| (ஈ) | தேவையைச் சரிவர இனங்காணாது 2013 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட ரூபா 4.64 மில்லியன் பெறுமதியான 1963 பிரதிநிகளைக் கொண்ட இலங்கை வரைபடத் தொகுப்பு மற்றும் 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1.13 மில்லியன் பெறுமதியான குரோவின் மற்றும் லிதோ கடுதாசிகள் என்பன மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு களஞ்சியத்தில் எஞ்சியிருந்தன. | தேவைகளை இனங்கண்டு அச்சிடல் மற்றும் கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். | தேசிய வரைபடத் தொகுப்பை அச்சிடும் போது அச்சகக் கிரயம் குறையும் விதத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கோரிக்கைகள் குறைவாகையால் கையிருப்பு எஞ்சியுள்ளது. எதிர்பார்த்தவாறு வரைபட விற்பனை குறைந்ததால் லிதோ கடுதாசி சேமிப்புக்குள்ளாகியது. |
| (உ) | 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவை அதிகாரச்சட்டத்தின் 08 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கை முழுவதும் படிப்படியாக உள்ளடக்குமாறு சேர்வேயர் ஜெனரலால் புள்ளி விபரங்களுடன் கூடிய அல்லது வேறு விதத்திலான பூகோள ரீதியான தரவு அடிப்படை மற்றும் பகுதிவாரியான தரவு அடிப்படை என்பன பேணப்பட வேண்டுமாயினும், பூகோள ரீதியான தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்ட 20,760 சதுர கிலோ மீட்டருக்கான தரவுகள் 1982 - 2007 ஆம் காலப்பகுதிக்குரிய பழைய தரவுகளாகையால் அதன் மூலம் நாளதுவரையாக்கப்பட்ட | நாளதுவரையாக்கப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்களைப் பொது மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இலங்கை முழுவதுமாக உள்ளடக்கப்படும் விதத்தில் பூகோள ரீதியான தகவல் முறைமையைத் தயாரிப்பது திணைக்களத்தின் பிரதான கடமையாகும். அதற்கமைய, 1:50,000 மற்றும் 1:10,000 எனும் பரிமாணத்தில் இரு பூகோள ரீதியான முறைமைகள் பேணப்படுகின்றன. 1:50,000 எனும் பரிமாணத்திலான |

| | | |
|---|---|---|
| தரவுகளைப் பொதுமக்கள் பெற்றுக் கொள்வற்கான வாய்ப்பு தவறியிருந்தது. | | புவியியல் தகவல் முறைமை 2018 ஆம் ஆண்டு நிறைவில் முற்றாகத் தயாரிக்கப்பட்டு புதிய வெளியீடாக நிறுவப்பட்டுள்ளது. 1:10,000 எனும் பரிமாணத்திலான தரவு முறைமையை 2019-2023 காலப்பகுதியின் போது நாளதுவரையாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. |

**4. மனித வள முகாமைத்துவம்**

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| **(அ) பதவியணியினரைப் பயிற்றுவித்தல்** | | |
| திணைக்களத்தின் 4,073 உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கு நடப்பாண்டில் பயிற்சி அளிக்கப்படவில்லை. | செயலாற்றலை அதிகரிப்பதற்கு உத்தியோகத்தர் களுக்குப் பயிற்சி வழங்க வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட நிதி ஏற்பாட்டின் மூலம் 2,050 ஊழியர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் 2019 ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டின் மூலம் பயிற்சி வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| **(ஆ) தொடர்புடைய கடமைகளுக்கு அப்பால் பணியில் அமர்த்தப்படுதல்** | | |
| தொழில்நுட்ப மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களால் வரைபடத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மேற்பார்வையிடப்பட வேண்டுமாயினும், நில அளவை | களத்திற்கு உரிய உத்தியோகத்தர்களால் மேற்பார்வை செய்யப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

உத்தியோகத்தர்களால் 61 வரைபடத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மேற்பார்வை செய்யப்பட்டிருந்தனர்.